முருகப்பெருமான் துணை

# மகான் கோட்புலி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.05.2021, செவ்வாய்கிழமை

1. அவதார சக்தியே அரங்கா
அண்ணலாக வந்த தேசிகா
புவனமதில் உன் பெருமை கூறி
புகலுவேன் யோகபிரசன்ன ஆசி
2. ஆசிதனை பிலவ தகரின் திங்கள்
அய்நான்கோர் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2021 செவ்வாய்கிழமை)
பேசிடுவேன் கோட்புலி நாயனாரும்
புகலுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் சன்மார்க்க நெறி
நம்பிக்கை தரும் சக்தியாக இருக்க
பலம்பெற உலகமக்கள் அனுகி
பிரணவக்குடிலில் அரங்கன் திருவடி
4. திருவடி பணிந்து ஆசியோடு
தீட்சை ஏற்று வருதலுற
குருவேயென தொடர்ந்து வர
குறைவிலா தருமங்களும் செய்து
5. செய்துமே அரங்கன் காட்டும்
சிறப்பான வழிகளை பின்பற்றியே
மெய்ஞான நிலைகள் கூடி
முருகப் பெருமான் அருளும் தயவும்
6. தயவும் கிட்டி உலகமக்கள்
தவபலமும் கண்டு உயர்வர்
நேயமுடன் கலியுக மக்கள்
நீதி வழி செயல்பாடுகளாக
7. ஆகவே அவசியம் அரங்கன் வழியை
அகிலத்தார் ஏற்று வருக
மிகைபட நற் சேவை வளர்ந்து
மேலவர்கள் எனும் தன்மை அடைவர்
8. அடையவே மாயை துன்பங்கள்
அனுகிடும் வக்கிர சிந்தைகள்
சோடைகள் யாவும் விலகியே
சுபிட்சமும் மனபலமும் அடைவர்
9. அடையவே அரங்கஞானியரின்
ஆசிபெற்று வரும் மக்களுக்கு
இடரில்லா மன பக்குவமும் தேற்றமும்
இணையில்லா தருமபலமும் வளமும்

10. வளமான செயல் திட்டங்களும்
வளர்ச்சிப் பணிகளும் பெருகி
பலமான ஆளுமை திடமும்
பாதுகாப்பான வாழ்க்கை நிலையும்

11. நிலையான ஆறுதலும் ஆக்கமும்
நீதி காக்கும் மக்கள் சக்தியாகி
உலகமே ஞானபலம் அடையும்
உரைத்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—